முருகப்பெருமான் துணை

அருட்பெருஞ்சோதி அருட்பெருஞ்சோதி தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்சோதி

**மகான் வியாசர் அருளிய ஒளி சூட்சும நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A.,B.Ed.

06.11.2018, செவ்வாய்க்கிழமை

1. **சற்குருநாதனே அரங்கா போற்றி**
**சங்கடம் போக்கி காத்தருள**
**அற்புதம்பட ஆறுமுகனார் சூட்சுமமாக**
**அவதாரம் புரிந்த அண்ணலே**
2. அண்ணலே **விளம்பி துலை திங்கள்**
**அறிவிப்பேன் இருபான் திகதி குசன் வாரம்**
**(விளம்பி வருடம் ஐப்பசி மாதம் 20ம் நாள் 06.11.2018, செவ்வாய்க்கிழமை)**
**மண்ணுலகில் ஒளி சூட்சும நூலை**
**மகான் வியாசர் பெருமான் யானும்**
3. யானும் உலக நலமுற உரைப்பேன்
உண்மைபட சத்திய ஞானநெறி
ஞானமாக ஆறுமுகப் பெருமான்
ஞானதேசிகன் மூலம் இயக்கிவர
4. வருகவே வள்ளல் விதைத்த
வளமான சுத்த சைவ நெறி
ஆறுமுக அரங்கனை கொண்டே
ஆறுமுகனார் உலகமெங்கும் ஏற்க
5. ஏற்கவே சேவை ஆற்றிவர
ஏழாம் படை வீடென வடிவம்
ஏற்புறும் வண்ணம் உருவாக்கி
ஏழ்மை பசிபிணி விரட்டும்
6. விரட்டும் அன்னதான படை வீடாக
வினை வெல்லும் தரும வீடாக
ஆறுமுகனார் அற்புதம் நடத்த
அரங்க ஞானியரை கண்டு
7. கண்டுமே கலியுகத்தார்கள்
கருமவினை விலக தருமத்தில்
தொண்டுடன் பொருளுதவி
தொடர்ந்து செய்து வருதலுற
8. வருகவே மக்களிடை தயவும்
வல்லமையான தரும பலமும்
பெருகியே அரங்கன் அருளும்
பேரின்ப ஞானகதிக்கு தகுதிகூடி
9. கூடியே மேன்மக்களாவர்
குறையில்லா ஞானவான்களாவர்
நாடியே அரங்க மகானின்
ஞானத்தலைமை ஏற்பவரெல்லாம்

10. எல்லோரும் கலியுகக் கொடுமை
இன்னல்கள் வழி துன்பம் நேரா
வல்லமையுடன் பெரும் பாதுகாப்பும்
வாழும் காலமே ஞானிகள் ஆசியும்

11. ஆசிபட அழியாமை வரமும்
ஆறுமுகனார் ஞான ஆட்சியில்
நேசமுடன் கீர்த்தியும் வளமும்
நெடிய வாழ்வும் கண்டு சிறப்பர் ஒளி சூட்சும நூல் முற்றே.

–சுபம்–

**முருகப்பெருமான் துணை**

**மகான் வியாசர்பெருமான் அருளிய ஒளி சூட்சும நூலின் சாரம் :**

ஒப்பற்ற ஞானம் பெற்று உண்மை ஞானம்தனை உலகிற்கு உபதேசிக்கின்ற சற்குருநாதனே அரங்கமகா தேசிகனே போற்றி போற்றி. சங்கடங்களைப் போக்கி மக்களைக் காத்து அருள்புரிய வந்திட்ட ஞானியே அற்புதமாய் முருகப்பெருமானின் சூட்சுமமாக அவதாரம் புரிந்திட்ட அண்ணலே அரங்கமகா தேசிகனே அற்புதம்மிக்க உமது புகழை உலகமெலாம் கூறியே உலக நலம் கருதி **விளம்பி வருடம் ஐப்பசி மாதம் 20ம் நாள் 06.11.2018, செவ்வாய்க்கிழமையான** இன்றைய தினமதனிலே ஒளி சூட்சும நூல்தனையே வியாசர்பெருமான் யானும் உரைக்கின்றேன் என்கிறார் மகான் வியாசமுனிவர்.

இவ்வுலகினில் சத்திய ஞானநெறியானது உண்மையுடன் ஞானமாக ஆறுமுகப்பெருமான் அரங்கமகா ஞானதேசிகனார் மூலம் உலகினில் இயங்கி வருகின்றதப்பா.

ஆதலால் வள்ளல் பெருமான் ராமலிங்கசுவாமிகள் விதைத்திட்ட வளம்மிக்க கொல்லா நெறியினையும் ஜீவதயவினையும் அடிப்படையாகக் கொண்ட சுத்தசைவ நெறியானது ஆறுமுக அரங்கமகா தேசிகனார் மூலமாக முருகப்பெருமானால் காக்கப்படுகின்ற இப்புவியினில் உள்ள மக்களெல்லாம் ஏற்று நடந்திடவே தளராது தொண்டுகள் செய்து வருகின்றார்.

ஆதலினால் ஏழாம் படை வீடு துறையூர் ஓங்காரக்குடிலை மக்களெல்லாம் ஏற்கும் வண்ணமாக ஆற்றலுடன் உருவாக்கியுள்ளார் ஆறுமுக அரங்கமகான். ஏழ்மையை விரட்டும் அற்புத வீடாக பசிப்பிணி போக்கும் ஆலயமாக அன்னதான படைவீடாக வினைகளை வெல்லும் தருமத்தின் வீடாக முருகப்பெருமானே இயக்கி அற்புதங்களை நடத்திக் கொண்டிருக்கிறார்.

ஆகவே உலக மக்களே ஏழாம் படை வீடு துறையூர் ஓங்காரக்குடிலை உடன் விரைந்து நாடி வாருங்கள். வந்துமே ஆறுமுக அரங்கமகா தேசிக ஞானியரைக் கண்டு பயபக்தியுடன் வணங்கி உங்களது கர்மவினைகளாகிய முன்ஜென்ம பாவங்கள் எல்லாம் விலகி ஓடும்படியாக உலக நலன் கருதி அரங்கன் செய்யும் தானதருமங்களுக்கு பொருளுதவிகளைச் செய்து, தொண்டுகளைச் செய்து வர வேண்டும். இவ்விதமே தொண்டுகளும், பொருளுதவிகளும் தருமத்திற்காக செய்து வரவர, உலக மக்களிடையே தயவு பெருகும் வல்லமையான தருமத்தின் பலமும் அதிகமாகி ஆறுமுக அரங்கமகா தேசிகனாரின் அருளும் பெருகி பேரின்ப ஞானகதிக்கு தகுதிகள் அதிகமாகி மேன்மைமிக்க உயர் மக்களாக ஆகிடுவார்கள், குறைகள் ஏதும் இல்லாத ஞானவான்களாக ஆகிடுவார்கள்.

ஆறுமுக அரங்கமகா தேசிகனாரை குருவாய் ஏற்றுக் கொண்டு அரங்கமகாதேசிகனாரின் தலைமையை ஏற்கின்றவர்களுக்கு கலியுகத்தின் கொடுமைகளால் வருகின்ற துன்பங்கள் ஏதும் வாராமல் வல்லமையுடன் அரங்கன் அருளால் பெரும் பாதுகாப்பும் அவர்கள் வாழும் காலத்திலேயே ஞானிகள் ஆசியும் அழியாமை எனும் அழிவிலாமை வரமும் பெற்று ஆறுமுக அரங்கன் தலைமையேற்கும் முருகப்பெருமானின் ஞானஆட்சியிலே அன்புடனும் பண்புடனும் புகழ்மிக்கவராய் வளமான வாழ்வினை உடையவராய் நீடிய ஆயுளுடன் சிறந்து வாழ்வார்கள் என தமது ஒளி சூட்சும நூல் மூலம் உலகறிய உரைக்கின்றார் மகான் வியாசர்பெருமான்.

–சுபம்–